## இலங்கை அரசாங்க பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் - 2018

---

இலங்கை அரசாங்க பெருந்தோட்டக் கூட்டுத்தானத்தின் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் நிருவகிக்கின்ற தரப்பினர்களின் பொறுப்புக்கள்

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டதின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படுகின்ற அனைத்து நிறுவனங்களாலும் அந் நிறுவனம் சம்பந்தமாக வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் பொறுப்புக்கள் தொடர்பான முறையான புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும். அந்த அதிகாரச் சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படுகின்ற ஒவ்வொரு நிறுவனம் சம்பந்தமாகவும் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் சட்டவிதிகளின் மூலம் காட்டப்பட்ட வகையில் உரிய காலப்பகுதிக்குள் கிடைக்க கூடியவாறு அந் நிறுவனத்தின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் சேர்த்து பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அந்த அதிகாரச் சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கையும் ஏனைய நிதிக்கூற்றுக்களும் தேவைப்படுகின்ற காலத்திற்குள் தயாரித்தல் இடம் பெறுகின்றது. என்பது சான்றுப்படுத்தப்பட வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கவனித்தல் வேண்டும். எவ்வாறாயினும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு மற்றும் 2004 பெப்ரவரி 24 ஆந் திகதிய 01/2004 ஆம் இலக்க திறைசேரி சுற்றிக்கையின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்பிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இவ்வறிக்கைத் திகதி வரை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2. கணக்காய்வு அவதானிப்புக்கள்

---

(அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

---

| | சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (i) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் இலக்கம் 371(2) | செயல்நிமித்த உப கட்டுநிதியைப் பெற்றுக்கொண்டு உரிய செயற்பாடு பூர்த்தியடைந்து 10 நாட்களுக்குள் அந்த உப கட்டுநிதி தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் 2018 ஆம் ஆண்டின் போது பதினைந்து உத்தியோகத்தர்கள் 42 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக்கொண்ட ரூபா 152,230 கூட்டுமொத்தமான உப கட்டுநிதிகள் 13 நாட்களிலிருந்து 218 நாட்கள் வரையான வீச்சுடைய காலம் தாமதிக்கப்பட்டிருந்தது. | 2018 ஆம் ஆண்டு தொடர்பான அனைத்து முற்பணங்களும் தற்பொழுது தீர்த்து வைக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் வழங்கப்படுகின்ற முற்பணங்களை 10 நாட்களுக்குள் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | செயற்பாடுகள் பூர்த்தியடைந்த உடன் உப கட்டு நிதிகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றிக்கையின் 9.3.1 ஆம் வழிகாட்டிகள் | ஊழியர்கள்/ உத்தியோகத்தர்களைச் சேர்த்துக்கொள்ளல் மற்றும் பதவியுயர்த்துவதற்காக காணப்பட வேண்டிய ஆகக்குறைந்த தகமைகளை உள்ளடக்கி ஆட்சேர்த்தல் மற்றும் பதவியுயர்த்துதல் நடைமுறையை தயாரித்து அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆட்சேர்த்தல் மற்றும் பதவியுயர்த்துதல் நடைமுறை தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்திற்காக 2019 மே 23 ஆந் திகதி அமைச்சின் ஊடாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | ஆட்சேர்த்தல் மற்றும் பதவியுயர்த்துதல் நடைமுறை விரைவாக அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். |
| (iii) | 2015 மே 25 ஆந் திகதிய PED 01/2015 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றிக்கையின் 2.3 ஆம் பந்தி | மீளாய்வாண்டிற்கான சுற்றிக்கையின் பிரகாரம் போக்குவரத்துப் படிகளுக்குத் தகமையற்ற MM1-1 சம்பளத் தொகுதியின் கீழ் சேவையாற்றிய நிதி முகாமையாளர், உள்ளகக் கணக்காய்வாளர், முகாமையாளர் (சட்டம்), முகாமையாளர் (காணிகள்) ஆகிய பதவிகளுக்காக மற்றும் அங்கீகரித்த பதவியணியில் இல்லாத தொழில்சார் பயிற்சி ஆலோசகர் பதவியை வகிக்கின்ற ஒரு உத்தியோகத்தருக்கும் ஒரு மாதத்திற்கு ரூபா 50,000 வீதம் ரூபா 1,450,000 மொத்த தொகை போக்குவரத்துப் படியாகச் செலுத்தப்பட்டது. | அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ள 2019.09.30 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் உள்ளக கணக்காய்வாளர், முகாமையாளர் (சட்டம்) முகாமையாளர் (காணிகள்) ஆகிய பதவிகளுக்காக போக்குவரத்துப் படிகளை வழங்குவதற்கு விசேட அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. | HM1-1 சம்பளத்தொகுதியிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் போக்குவரத்துப் படிகள் வழங்கப்பட வேண்டியதுடன் இல்லாதுவிடின் அதற்காக விசேட அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |
| | 2016 மார்ச் 17 ஆந் திகதிய தேசிய பாதிட்டு சுற்றிக்கையின் 2.3 (ii) ஆம் பந்தி | இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட தகமையுள்ள வழங்குனர்களிடமிருந்து செயற்பாட்டுக் குத்தகையின் கீழ் வாகனங்கள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தின் தலைவர் மற்றும் செயற்பாட்டுப் பணிப்பாளருக்காக தனிப்பட்ட ரீதியாகப் பதிவு செய்யப்பட்ட 02 வாகனங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு அதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 2.04 மில்லியன் வாடகை செலுத்தப்பட்டிருந்தது. | தூரம் 1000 கிலோ மீற்றருக்கு குறைவான மற்றும் பதவு செய்யப்படாத வாகனங்கள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டியிருந்ததனால் மேற்கூறிய சுற்றிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் மிகவும் சிக்கலானதாகும். எவ்வாறாயினும் மாதாந்தம் ரூபா 135,000 பணம் கூட்டுத்தாபனத்தினால் சேமிக்கக்கூடிய வகையில் வாகனங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. | இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதவி செய்யப்பட்ட நிறுவனங்களிடமிருந்து மாத்திரம் குத்தகை அடிப்படையில் வாகனங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். |
| (v) | 2017 ஒக்தோபர் 25 ஆந் திகதிய 5/2007 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றிக்கையின் 01 ஆம் பந்தி | நிரந்தர அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட சிரேஷ்ட மட்டத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்காக வழங்கக்கூடிய உச்ச அளவு மாதாந்த படிகள் ரூபா 15,000 ஆக | 05/2017 ஆம் இலக்க சுற்றிக்கையின் பிரகாரம் இந்த உத்தியோகத்தர்களுக்கு தொழில்சார் படிகள் மற்றும் உயர்ந்த | அங்கீகரித்த ஊழியர்களுக்கு அங்கீகரித்த தொழல்சார் படிகளை மாத்திரம் செலுத்துதல் |

| | | |
|---|---|---|
| இருந்தபோதிலும் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட முகாமையாளர் (சட்டம்) அவர்களுக்கு ரூபா 40,000 வீதம் மீளாய்வாண்டின் 02 மாதங்களுக்காக ரூபா 80,000 படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | சம்பளங்கள் வழங்கப்படாது உரிய சேவையைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. எனினும் நிகழ்காலத்தில் 2016 ஆம் இலக்க சுற்றிக்கையின் பிரகாரம் ஆரம்ப சம்பளத்தில் அமர்த்தப்பட்டு சட்ட உத்தியோகத்தர் ஒருவரை சேர்த்துக் கொள்ளக்கூடியதாக உள்ளது. | வேண்டும். |

**(ஆ) முகாமைத்துவ செயற்பாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமையாளரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (i) | 1979 இன் 49 ஆம் இலக்க இலங்கை அரசாங்க பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபன (திருத்திய) அதிகாரச் சட்டத்தின் 07(01) A உப பிரிவின் கீழ் அமைச்சரின் எழுத்திலான முன் அங்கீகாரம் இல்லாது கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான எந்த நிரந்தர ஆதனங்களையும் வாடகைக்கு வழங்குதல், குத்தகைக்கு வழங்குதல், விற்பனை செய்தல் அல்லது வேறு வழிகளில் அப்புறப்படுத்துதலாகாது எனக் குறிப்பிடப்பட்டிருந்தும் கூட்டுத்தானத்தின் 16 காணிகளையும் 02 கட்டிடங்களையும் குத்தகைக்கு வழங்கும் போது அமைச்சரின் எழுத்துமூல முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மேற்கூறிய கட்டிடங்கள் பல ஆண்டுகளுக்கு முன்னர் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளதனால் உரிய கொவைகளை ஆய்வு செய்யாது அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டதா இல்லையா என்பதனை சந்தேகமின்றி கூற முடியாதுள்ளது. இக் குத்தகைக்கு வழங்குவதன் மூலம் சிலவற்றைத் தவிர ஏனைய காணிகளுக்காக தற்பொழுதும் அமைச்சரின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. எஞ்சிய காணிகளுக்காக பணிப்பாளர்கள் சபையின் சிபார்சின் பேரில விரைவாக நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களை குத்தகைக்கு வழங்கும் போது அமைச்சரின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ii) | கூட்டுத்தாபனம் 2002 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டுவரையான காலத்தின் போது 273.76 ஹெக்டயர் அளவான 09 காணிகளை குத்தகை அடிப்படையில் வெளித்தரப்பினர்களுக்கு வழங்கியிருந்ததுடன் அதற்காக கூட்டுத்தாபனம் அறவிட வேண்டியிருந்த ரூபா 26.53 மில்லியன் தொகையான குத்தகைப் பணத்தை 2019 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையும் அறவிட முடியாதிருந்தது. | இதுவரையும் கொடுப்பனவு செய்வதற்கு முடியாதிருந்த குத்தகை உடன்படிக்கைகள் சம்பந்தமாக சட்டரீதியான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்காக உரிய பிரிவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. விரைவாக இந் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படகுின்றது. | உரிய குத்தகைப் பணத்தை விரைவாக அறவீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | கூட்டுத்தானத்திற்குச் சொந்தமான 05 காணிகள் உடன்படிக்கை செய்யப்படாது தொடர்பாடல் கோபுரங்களை நிர்மாணிப்பதற்காக வெளிநிறுவனங்களுக்கும் வெளித்தரப்பினர்களுக்கும் வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக அறவிட வேண்டிய ரூபா 24.05 மில்லியன் நிலுவைக் குத்தகைப் பணத்தை 2019 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரை அறவீடு செய்ய முடியாதிருந்தது. | இந் நிலுவைப் பணங்களில் அதிகளவான பணம் நிலுவையாகக் காணப்பட்டது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தானத்திடமாக இருந்ததுடன் அவற்றினை அறவீடு செய்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்தின் எழுத்துமூல ஆலோசனை பெற்றுக்கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சில குத்தகை உடன்படிக்கைகள் மீறப்பட்டுள்ளதன் காரணமாக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுப்பதற்கு சட்ட பிரிவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | நிலுவையான குத்தகைப் பணத்தை விரைவாக அறவீடு செய்தல் வேண்டும். |
| (iv) | கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ஓபல்கல தோட்டம் 2002 ஆம் ஆண்டின் போது ஒரு தனியார் கம்பனிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டு பின்னர் அது இரத்துச் செய்யப்பட்டிருந்தும் அக் கம்பனியிடமிருந்து 2002 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 4.48 மில்லியன் முற்பணத்தை 2019 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு ஐய வினாவுடன் இணங்குகின்றேன். அவ்வாறான பணம் எங்களுக்கு வழங்கப்பட்டமைக்கு எழுத்து மூல உடன்படிக்கை இல்லை. எவ்வாறாயினும், கூட்டுத்தாபனத்திற்கு அவ்வாறு பணம் செலுத்தப்பட்டுள்ளது. என்பதனை நிதிப் பிரிவு உறுதிப்படுத்தும் இப் பணத்தை செலுத்துவதற்கு சட்டரீதியான ஏற்பாடு உள்ளதா என்பதனை ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். | உரிய முற்பணத்தை விரைவாக தீர்த்துவைத்தல் வேண்டும். |
| (v) | கூட்டுத்தானத்தினால் குத்தகை அடிப்படையில் வெளித்தரப்பினர்களுக்கு வழங்கியுள்ள 29 ஏக்கர் காணிகள் மற்றும் 3 கட்டிடங்கள் குத்தகைதாரர்களால் கைவிடப்பட்டிருந்ததுடன் அந்த உடன்படிக்கைகளை இரத்துச் செய்து ரூபா 5.17 மில்லியன் நிலுவை குத்தகைப் பணத்தை அறவிட்டு புதிய உடன்படிக்கையின் கீழ் மீண்டும் குத்தகைக்கு வழங்குவதற்கு 2019 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இக் குத்தகை கொடுக்கல் வாங்கல்தாரரினால் கைவிடப்பட்ட காணி மற்றும் கட்டிடங்களுக்கான குத்தகை உடன்படிக்கையை இரத்துச் செய்வதற்கும் மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கும் சட்டப் பரிவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படகின்றது. | உடன்படிக்கையை இரத்துச் செய்து நிலுவை குத்தகைப் பணத்தை அறவிட்டு உரிய செத்துக்கள் சம்பந்தமாக மாற்று நடைமுறைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (vi) | ஹுன்னஸ்கிரிய தோட்டத்தின் கூட்டுத்தானத்திற்குச் சொந்தமான ஒரு காணி ‘‘ஹுன்னஸ்போல்’’ என்ற பெயரிலான ஒரு செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு தோட்ட கூட்டுறவுச் சங்கத்திற்கு நில அளவினை இனங்கண்டு கொள்ளாமல் எழுத்து மூல உடன்படிக்கை செய்யப்படாது வழங்கப்பட்டிருந்ததுடன் உரிய செயற்திட்டத்திலிருந்து கிடைக்கின் வருமானத்தை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளாது அந்த வருமானத்தில் முழுச் செலவுகளையும் | ஹுன்னஸ்கிரிய தோட்ட அதிகாரியுடன் கலந்துரையாடி அரசாங்க மதிப்பீட்டின் பிரகாரம் அறவிட வேண்டிய மாதாந்த வாடகையை உள்ளடக்கி எழுத்துமூல உடன்படிக்கை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாதாந்த வாடகையும் ஏனைய நலன்களும் உடன்படிக்கையில் உள்ளடக்கப்படுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கின்றேன். | கூட்டுத்தானத்திற்குச் சொந்தமான சொத்துக்களை வெளித்தரப்பினர்களுக்கு வழங்கும் போது எழுத்துமூல உடன்படிக்கையின் கீழ் மிகவும் சாதகமான நிபந்தனைகளின் அடிப்படையில் இருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கழித்தன் பின்னர் இலாபத்தில் ஒரு பகுதி மாத்திரம் பெற்றுக்கொள்வதன் காரணமாக அதிக அளவான வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | | |
| (vii) | அடிப்படை சாத்தியவள ஆய்வின்றி 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 08 தோட்டங்களில் உற்பத்தி செய்யப்பட்டிருந்த ரூபா 3.34 மில்லியன் கிரயமான 634,595 நுளம்புச் சுருள்கள் விற்பனை செய்ய முடியாது தலைமை அலுவலகத்திலும் சில தோட்டங்களிலும் களஞ்சியங்களில் குவித்து வைக்கப்பட்டிருந்ததுடன் இந்த இருப்புக்கள் தற்பொழுது காலவதியாகும் நிலையில் காணப்பட்டன. | சமமான உற்பத்திகளுடன் ஒப்பிடும் போது இவற்றின் விலைகள் உயர்ந்த மட்டத்தில் காணப்படுதல், நுளம்புச்சுருள்கள் சம்பந்தமாக பொது மக்களின் அறிவு குறைவாக இருத்தல், பகிரங்கப்படுத்தல் போதியளவில் இல்லாமை, நடுவர்கள் அதிகளவு தொகையை வேண்டியிருந்தமை ஆகிய காரணங்களால் இருப்புக்களை விற்பனை செய்ய முடியாது மிகுதியாக இருந்ததுடன் சமூக பிரதிபலன்களை அதிகம் கருத்திற்கொண்டு உரிய செயற்பதிட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. | அதிக அளவில் உற்பத்தியை மேற்கொள்வதற்கு முன்னர் அடிப்படை சந்தை சாத்தியவள ஆய்வினை மேற்கொண்டு சந்தை வேண்டுதல்கள் இனங்காணப்படுதல் வேண்டும். |
| (viii) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய மற்றும் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிய அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் பங்களிப்பு பணத்தை செலுத்தும் போது வாழ்க்கைச் செலவுப் படிகள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டியபோதிலும் கூட்டுத்தாபன ஊழியர்களின் பங்களிப்பை கணிக்கும் போது வாழ்க்கைச் செலவுப் படிகள் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படாததன் காரணமாக மீளாய்வாண்டின் போது பங்களிப்பு பணம் ரூபா 1.48 மில்லியன் குறைத்து செலுத்தப்பட்டிருந்தது. | தற்பொழுது ஊழியர் சேமலாப நிதியும் ஊழியர் நம்பிக்கை நிதியும் செலுத்தும் போது வாழ்க்கைச் செலவுப் படிகள் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றது. | வாழ்க்கைச் செலவுப்படிகளையும் கவனத்தில் கெண்டு சேமலாப நிதியை செலுத்துதல் வேண்டும். |
| (ix) | 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ 01/2015 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் தலைவரின் மாதாந்த எரிபொருள் படி 170 லீற்றர்களாக இருந்த போதிலும் அந்த எல்லையை மிகைத்து மீளாய்வாண்டிற்காக ரூபா 91,260 பெறுமதியான 780 லீற்றர் எரிபொருட்கள் அமைச்சு செயலாளரின் அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டிருந்தது. | 2019.02.07 ஆந் திகதியிலிருந்து உரிய சரிசெய்தல்கள் செய்யப்பட்டுள்ளன. | அங்கீகரித்த எல்லையை மிகைத்து எரிபொருட்களைப் பெற்றுக்கொள்ளும் பொது அமைச்சு செயலாளரின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |

**(இ) செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (i) | 100 ஆண்டுகளுக்கு மேல் பழைமையான 1523 ஹெக்டயர் தேயிலை பயிர்ச்செய்கையை அகற்றி | இப் பதின்மூன்று தோட்டங்களிலும் மத்திய மலைநாட்டு தேயிலைத் தொகுதிக்கு கொண்டு வரப்பட்ட | மிகவும் பழைய பயிர்களை அகற்றி விளைச்சல் கூடிய மீள் |

| | | | |
|---|---|---|---|
| | மீள்பயிர்ச்செய்கையில் ஈடுபடாமையின் காரணமாக 2017 ஆம் ஆண்டில் 1595 கிலோக்கிராம் ஆன இலங்கையில் ஒரு ஹெக்டயருக்கான ஏற்றுக்கொள்ளப்பட்ட வருடாந்த சராசரி பூர்த்தி செய்த தேயிலை விளைச்சலை அடைந்து கொள்ள முடியாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது கூட்டுத்தானத்திற்குச் சொந்தமான 13 தோட்டங்களின் ஒரு ஹெக்டெயருக்கான வருடாந்த தேயிலை விளைச்சலின் சராசரி 200 கிலோ கிராம்களிற்கும் 863 கிலோ கிராம்களிற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | China Jat வகையின் 100 ஆண்டுகளுக்குப் பழைமையான விதைத் தேயிலை வகைக்குப் பதிலாக விளைச்சல் கூடிய ரிகிலி தேயிலை பயிர்ச்செய்கையில் ஈடுபட வேண்டிய போதிலும் அதற்காக ஹெக்டயருக்காக செலவு செய்யப்படுகின்ற ரூபா 7 மில்லியனும் ரூபா 8 மில்லியனுக்கும் இடைப்பட்ட கிரயம் மற்றும் மண் பாதுகாப்பைப் போல பசளைகளை ஈடுபடுத்துவதற்கு கூட்டுத்தாபனத்தின் நிதிச் சிக்கல் ஏற்பட்டுள்ளதுடன் தொழிலாளர் பற்றாக்குறையும் விளைச்சல் குறைவிற்கு தாக்கமளித்துள்ளது. | பயிர்ச் செய்கையில் ஈடுபடுதல் விரைவாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ii) | கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 1,163 ஹெக்டெயர் காணிகள் வெளித் தோட்டக்காரர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அக்காணியிலிருந்து தொழிலில் காணப்படுகின்ற ஒரு ஏக்கருக்கான ஏற்றுக்கொள்ளப்பட்ட சராசரி விளைச்சலாக 1,854,985 கிலோ கிராம் தேயிலை கொழுந்து அறுவடை பெற்றுக்கொள்ள வேண்டியிருந்த போதிலும் வெளித்தோட்டக்காரர்களினால் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கியிருந்த கொழுந்து அறுவடை 102,507 கிலோ கிராமிற்கு அல்லது 6 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இதற்காக பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு கூட்டுத்தாபன நிருவாக அத்தியட்சகர் 2019 ஒக்தோபர் 31 அந் திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கொழுந்து ஒரு கிலோ கிராமிற்காக வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்படுகின்ற பணம் போதியதல்லாததன் காரணமாக அவர்கள் அலட்சியமாக இருந்தமை விளைச்சல் குறைவடைந்தமைக்கு தாக்கமளித்திருந்தது. இதற்கு மேலதிகமாக விளைச்சலைப் பெற்றுக்கொள்வதற்கு பழைய விதை தேயிலை பயிர்செய்கை மாத்திரம் உள்ள ''சீ'' துறையினை கூட்டுத்தாபனம் ஒப்படைத்திருந்தமையும் மேலும் காரணமாகும். | கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணிகளிலிருந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட சராசரி விளைச்சலைப் பெற்றுக்கொள்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | ஒரு கிலோகிராம் தேயிலையின் ஏற்றுக்கொள்ளப்பட்ட உற்பத்திக் கிரயம் ரூபா 475 ஆக இருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தின் அப்பெறுமதி ரூபா 500 இற்கும் ரூபா 717 இற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டதன் காரணமாக ஒரு உற்பத்தி அலகின் பங்களிப்பு மறைப் பெறுமதி ரூபா 2 இற்கும் மறைப் பெறுமதி ரூபா 300 இற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | பதவியணியினரின் சம்பளம் அதிகரித்தலும் தேயிலைகளின் தரம் குறைவடைவதன் காரணமாக ஒரு கிலோவின் விற்பனை விலை குறைவடைந்தமையும் இந்நிலமைக்கு காரணமாக இருந்ததுடன் தரம் குறைவடைவதற்கு கூட்டுத்தாபனத்தின் நிதி சிக்கலினால் உரிய வேளைக்கு பசளை இடப்படாமை காரணமாக இருந்தது. | உற்பத்திக் கிரயத்தை கட்டுப்படுத்தி விற்பனை விலைகளை அதிகரித்து பங்களிப்பை மேம்படுத்தச் செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | கூட்டுத்தாபனத்தின் 14 தோட்டங்களுக்குரிய முழுமையான நிலப்பரப்பளவு 10,520 ஹெக்டெயர்களாக இருந்த போதிலும் அவற்றில் பயிர்ச் செய்கைக்காக பயன்படுத்தப்பட்டுள்ள தேயிலைக் காணிகளின் அளவு 6,208 ஹெக்டெயர்கள் மாத்திரமாக இருந்ததன் காரணமாக கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 4,312 ஹெக்டெயர் காணிகள் அதாவது 41 சதவீதம் அளவான காணிகளை பயிர்செய்கை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இப் பயிர்ச்செய்கை செய்யப்படாத 41 சதவீதமான காணிகள் நகள்ஸ் பாதுகாப்பு பிரதேசத்தில் அமைந்திருந்தமை இந்நிலைமைக்கு காரணமாக இருந்தது. | பயன்படுத்தப்படாத காணிகளின் அளவை குறைக்கச் செய்து அனைத்து காணிகளையும் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துதல் வேண்டும். |

**(ஈ) சொத்துக்களின் குறைந்த பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான பத்து தேயிலை தொழிற்சாலைகளில் ஏழு தொழிற்சாலைகள் செயற்படாத நிலையில் காணப்பட்டதுடன் செயற்படாத தொழிற்சாலைகளை தேயிலை உற்பத்தி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துவதற்கு அல்லது குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அலகொல்ல, பல்பில்ல ஆகிய தொழிற்சாலைகள் தீயினால் அழிவடைந்துள்ளன. மேலும் 05 தொழிற்சாலைகள் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டன. செயற்பாடற்ற நிலையில் காணப்பட்ட ஹாகல தொழிற்சாலையை திருத்தம் செய்து உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு கலந்துரையாடப்பட்டு வருகின்றது. | மூடப்பட்டுள்ள தொழிற்சாலையை விரைவாக செயற்படுத்துதல் வேண்டும். |

(உ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (i) | மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை மற்றும் எல்கமுவ பெருந்தோட்டக் கம்பனியிடமிருந்து 22 ஆண்டுகளாக அறவிட வெண்டியிருந்த ரூபா 44.66 மில்லியன் பணத்தை அறவீடு செய்வதற்கு 2019 | எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனியிடமிருந்து பெற வேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்கு முடியாமை சம்பந்தமாக இணங்கி கொள்ளப்பட்டதுடன் அதற்காக ஞாபகமூட்டுதல் கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | உரிய பணத்தை விரைவாக அறவீடு செய்வதவற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒக்தோபர் 31 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையிடமிருந்து அறவிட வேண்டிய பணத்திற்கு மிகையாக நாங்கள் அந்த நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டிய பணம் இருந்ததனால் அப்பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | |
| ii | மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையை உள்ளடக்கி 07 அரசாங்க நிறுவனங்களுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகச் செலுத்த வேண்டிய ரூபா 277.67 மில்லியன் பணத்தை செலுத்தி தீர்த்து வைப்பதற்கு 2019 ஒக்தோபர் 31 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு ஐய வினா உடன் இணங்குகின்றேன். கூட்டுத்தாபனத்தில் காணப்பட்ட நிதிச் சிக்கலின் அடிப்படையில் தீர்த்து வைப்பதற்கு முடியாதிருந்தது. | உரிய பணத்தை விரைவாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஊ) ஆளணி நிர்வாகம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (i) | பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் அங்கீகரித்த 38 பதவிகளின் பதவியணியினர் 89 ஆக இருந்த போதிலும் அப்பதவியணியினரை மிகைத்து 6 உதவி தோட்ட அத்தியட்சகர்கள் 05 முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்கள் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் 03 சாரதிகள் சேர்த்துக் கொள்ளப்பட்டு சம்பளமும் படிகளமாக ரூபா 2.72 தொகை மீளாய்வாண்டின் போது செலத்தப்பட்டிருந்தது. | கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான தோட்டங்களின் அளவு 03 இனால் அதிகரித்தன் காரணமாக அவசர தேவைப்பாட்டின் அடிப்படையில் தோட்ட அத்தியட்சகர்கள் சேர்த்தக்கொள்ளப்பட்டவர்கள். தலைவருக்கும் செயற்பாட்டுப் பணிப்பாளருக்கும் சாரதிகளை வழங்குவதற்காக மற்றும் தலைமை அலுவலகத்தின் மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கையின் பிரகாரம் சாரதிகளை வழங்குவதற்காக சாரதிகள் சேர்த்தக்கொள்ளப்பட்டார்கள். | அங்கீகரித்த பதவியணியினர்களை மிகைத்து ஊழியர்கள் / உத்தியோகத்தர்கள் சேர்த்துக் கொள்ளப்படாதிருத்தல் வேண்டும். |
| (ii) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் இன்றி எட்டு பதவிகளுக்காக நிரந்தர அடிப்படையில் நான்கு உத்தியோகத்தர்களும் ஒப்பந்த அடிப்படையில் நான்கு உத்தியோகத்தர்களும் | மேலே (அ) இன் கீழ் பதில் வழங்கப்பட்டுள்ளது. | அங்கீகரித்த பதவிகளுக்காக மாத்திரம் உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சேர்த்துக்கொள்ளப்பட்டு அதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 5.29 மில்லியன் சம்பளக் கிரயம் இடம் பெற்றிருந்தது. | | |
| (iii) | தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 5.2 ஆம் பந்தியின் பிரகாரம் ஏதாவது ஒரு பதவியில் வெற்றிடம் ஏற்பட்டதும் உடனடியாக அப் பதவிக்காக நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2008 ஆம் ஆண்டிலிருந்து வெற்றிடமாக இருந்த முகாமையாளர் (சட்டம்) பதவிக்காக நிரந்தர அடிப்படையில் ஒரு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒரு சட்ட முகாமையாளரை சேர்த்தக்கொள்வதற்காக 2019.10.11 ஆந் திகதி டெய்லி நியூஸ் மற்றும் தினமின பத்திரிகைகளில் பகிரங்க அறிவத்தலை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்டப்டது. | வெற்றிகரமான பதவிகளுக்காக நிரந்தர, உத்தியோகத்தர்கள் / ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளப்படுதல் வேண்டும் |
| (iv) | உரிய அதிகாரிகளின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது முப்பத்து எட்டு நபர்களுக்கு 2017 ஆம் ஆண்டின் போதும் 2018 ஆம் ஆண்டின் போதும் 2 சம்பள ஏற்றங்களிலிருந்து 5 சம்பள ஏற்றங்கள் வரை வழங்கியதன் காரணமாக ரூபா 1.22 மில்லியன் மேலதிக ரூபா 1.22 மில்லியன் மேலதிக சம்பளக் கிரயம் மீளாய்வாண்டின் போது இடம் பெற்றிருந்தது. | 2017.05.31 அந் திகதி கூட்டுத்தாபனம் பெற்றுக்கொண்ட ரூபா மில்லியன் அளவான இலாபத்தின் காரணமாக ஊழியர்களை ஊக்குவிப்பதற்காக 2017.08.17 ஆந் திகதி பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு மேலதிக சம்பள ஏற்றங்களை வழங்குதல் இடம் பெற்றிருந்தது. | சம்பள ஏற்றத்தை வழங்கும் போது தாபன விதிக் கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |